Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 12, 2023

புதன்கிழமை ஜூலை 12, 2023 | ஒளி: 09 கதிர்: 038 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | Free

## தங்க பஸ்மத்துடன் ஐவர் கைது

டி.கே.பி கபில



சுங்கத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் 16 கோடியே 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க ஜெல் மற்றும் தங்க பஸ்மம் ஆகியவற்றை,

தொடர்ச்சி P2

சரத் வீரசேகரவின் கருத்தைக் கண்டித்து வடக்கு, கிழக்கில்

# நீதிமன்றங்கள் முடங்கின






தமிழ்மிரர் நிருபர்கள்

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தமிழ் நீதிபதிகள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வடக்கு, கிழக்கில் உள்ள நீதிமன்றங்களில் கடமையாற்றும் சட்டத்தரணிகள், செவ்வாய்க்கிழமை (11) நீதிமன்றங்களுக்குச் செல்லாது பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால், வடக்கு, கிழக்கில் உள்ள நீதிமன்றங்களின் செயற்பாடுகள் யாவும் முழுமையாக முடங்கின. இன்னும் சில நீதிமன்றங்களின் வாயில்கள் இழுத்து மூடப்பட்டிருந்தன.

அதுமட்டுமன்றி, 'பாராளுமன்ற சிறப்புரிமையை துஸ்பிரயோகம் செய்யாதே' உள்ளிட்ட இன்னும் பல வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் சட்டத்தரணிகள் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

எஞ்சிய நட்டஈட்டை செலுத்த

## 9 வருட அவகாசம் கோரினார் மைத்திரி



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுத் தொகையின் எஞ்சிய 85 மில்லியன் ரூபாயை வழங்குவதற்கு மேலதிக கால அவகாசம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயர் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் மூலம் கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதி, அமைச்சரை சந்தித்தார் இந்திய வெளிவிவகார செயலாளர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடெல்லி விஜயம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, செவ்வாய்க்கிழமை (11) சந்தித்தார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு திங்கட்கிழமை (10) மாலை இலங்கை வந்தடைந்த இந்திய வெளிவிவகார செயலாளருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பாதுகாப்பு அமைச்சில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியை, இந்திய வெளிவிவகார செயலாளர் நேற்றையதினம் காலை கொழும்பில் சந்தித்தார்.

தொடர்ச்சி P2




## 'அஸ்வெசும' மதிப்பீடுகள் விரைவில் ஆரம்பமாகும்

'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் திட்டம் தொடர்பாக பெறப்பட்ட மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளின் மதிப்பீடுகள் விரைவில் அந்தந்த மாவட்ட செயலகங்களால் மேற்கொள்ளப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கச்சத்தீவு மீட்பு வழக்கை இன்று விசாரிக்க முஸ்தீபு

கச்சத்தீவு மீட்பு வழக்கை அவசர வழக்காக எடுத்து விசாரணைகளை நடத்துமாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, வழக்கு விசாரணையை இன்றையதினம் (12) முன்னெடுக்க நீதிபதிகள் தீர்மானித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## 9 பேருக்கு பல வகையான தண்டனைகள் விதிப்பு



மேல் நீதிமன்றங்களால் ஒன்பது பேருக்கு மரண தண்டனை, வாழ்நாள் சிறைத்தண்டனை மற்றும் 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## கொட்டகலையில் ஆசிரியர் பயிற்சி பல்கலைக்கழகம்

பெருந்தோட்ட மக்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்கும் வகையில், தோட்டப் பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை ஆசிரியர்களாக பயிற்றுவிக்கும் பயிற்சிப் பல்கலைக்கழகமொன்றை கொட்டகலை பிரதேசத்தில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## யாழ் - சென்னை இடையே தினசரி விமான சேவை



யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையில் வாரத்துக்கு நான்கு நாள்கள் இடம்பெறும் விமான சேவையை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் தினசரி சேவையாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அரசாங்கத்தின் பயணம் சர்வாதிகார போக்குடையது

அரசாங்கத்தின் பயணமானது சர்வாதிகார போக்கு கொண்ட பயணமென்றும் பொலிஸ் மாஅதிபர் ஒருவரைக் கூட புதிதாக நியமித்து கொள்ள முடியாத அரசாங்கமாக காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## அமைச்சர் விரும்பிய போதும் அமைச்சரவை நிராகரித்தது

டெங்கு ஒழிப்பு பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் சேவையை நிரந்தரப்படுத்த, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல விருப்பம் தெரிவித்த போதிலும், அது தொடர்பான அமைச்சரவை பத்திரம் அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டு உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சதொசவை மறுசீரமைக்க அமைச்சரவை அனுமதி



அரசுக்குச் சொந்தமான, நாட்டின் மிகப்பெரிய கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை மறுசீரமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

பொதுவான சவால்களை முறியடிப்பதில்

# இந்தியாவும் இலங்கையும் விழிப்புடன் இருக்கின்றன

கடல் மார்க்கமான பாதுகாப்பு விவகாரங்களில் ஏற்படும் பொதுவான சவால்களை முறியடிப்பதில் இரு நாடுகளும் விழிப்புடன் இருக்கின்றன என்று இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற நிர்மாணம், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி கண்காட்சி 2023இன் அங்குரார்ப்பண நிகழ்விலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "இந்தியா, இலங்கை மக்கள் இடையிலான நெருக்கமான உறவுகள், கடந்த மூன்று வருடங்களில் மிகவும் சிறப்பாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

2023இன் முதல் 6 மாதங்களில்

## ரூ.100 கோடியை நெருங்கியது சுற்றுலாத்துறை வருமானம்



2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கையின் சுற்றுலா வருமானம் 986.2 மில்லியன் அமெரிக்க டொலராகும் என்று இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நீதிமன்றங்கள் முடங்கின

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை பிரதேசத்தில் 04.07.2023 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா களவிஜயத்தை முன்னெடுத்திருந்தார்.

அதன்போது அங்கு வருகை தந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கருத்து தெரிவிக்க முற்பட்ட வேளையில், பாராளுமன்ற உறுப்பினர்களுடைய கருத்துகளை அந்த இடத்தில் தெரிவிப்பதற்கு நீதிபதி அனுமதி மறுத்திருந்தார்.

இந்நிலையில் அங்கிருந்து வெளியேறிச் சென்ற சரத் வீரசேகர, 07.07.2023 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, தமிழ் நீதிபதிகள் தொடர்பில் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்திருந்தார். இவ்வாறான பின்னணியில், தமிழ் நீதிபதிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்துகளுக்கு வலுவான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் வடக்கு,கிழக்கைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டதுடன் பணிப்பகிஸ்கரிப்பிலும் ஈடுபட்டனர்.

போராட்டங்களில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் 'பாராளுமன்ற சிறப்புரிமையை துஸ்பிரயோகம் செய்யாதே', 'நீதித்துறை சுதந்திரம் ஓங்குக', 'கௌரவ நீதிபதிகளின் கடமைகளில் தலையிடாதே', 'நீதித்துறையின் சுயாதீன செயற்பாட்டுக்கு தடையேற்படுத்தாதே', 'தலையிடாதே, தலையிடாதே நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடாதே', 'நீதிக்கே சோதனையா; இது அரசியல் சார்பு வேதனையா'?, 'சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நட' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு அமைதியான முறையிலே குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# தங்க பஸ்மத்துடன் ஐவர் கைது



சென்னைக்கு கடத்திச் செல்வதற்கு முயன்ற வர்த்தகர்கள் ஐவர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, செவ்வாய்க் கிழமை (11) கைது செய்யப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அண்மையில் தன்னுடைய வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதான வர்த்தகர்கள் நால்வர் மற்றும் 55 வயதான வர்த்தகர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சென்னை நோக்கி பகல் 1.55க்கு புறப்படவிருந்த விமானத்தில் பயணிப்பதற்கே அவர்கள் விமான நிலையத்துக்கு வந்துள்ளனர்.

அவர்களின் பயணப்பொதிகளில் 8 கிலோ 650 கிராம் நிறையுடைய தங்க ஜெல் 23, தங்க பஸ்மம் அடங்கி 10 பக்கெற்றுகள் கைப்பற்றப்பட்டன.

# அமைச்சர் விரும்பிய போதும் அமைச்சரவை நிராகரித்தது

டெங்கு ஒழிப்பு அதிகாரிகளின் பிரதிநிதிகளுடன் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இதற்கு முன்னரும் இதேபோன்ற பல அமைச்சரவைப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டார். இவர்கள் 7 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் டெங்கு ஒழிப்புக்கு 22 ஆயிரம் ரூபாய் உதவித்தொகையுடன் பணிக்கமர்த்தப்பட்ட அரச ஊழியர்கள் என்பதால், 180 நாள் சேவை நாள்களுக்குள் நிரந்தரமாக்க வேண்டும் என்ற நிலை இருந்தது.

அது அவ்வாறு அமல்படுத்தப்படவில்லை. இதனால் 1,105 அதிகாரிகள் கைவிடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

# 'அஸ்வெசும' மதிப்பீடுகள்...

உதவி தேவைப்படும் அனைத்து தகுதியான நபர்களும் அஸ்வெசுமாவில் சேர்க்கப்படுவதை அரசாங்கம் உறுதி செய்யும் என்றும் ஓகஸ்ட் மாதம் மீண்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

'அஸ்வெசும' பயனாளிகளின் பட்டியல் தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு திங்களுடன் (10) முடிவடைந்த நிலையில், பயனாளிகளின் பட்டியல் தொடர்பாக மொத்தம் 968,000 முறையீடுகளும் 17,500 ஆட்சேபனைகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# 9 வருட அவகாசம் கோரினார் மைத்திரி



உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, இழப்பீடுகளுக்கான அலுவலகத்துக்கு ஏற்கெனவே மொத்தம் 15 மில்லியன் செலுத்தியதாக அந்த நகர்த்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீதித் தொகையான 85 மில்லியன் ரூபாயை 2024ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி முதல் 2033ஆம் ஆண்டு ஜூன் 30 அன்று முடிவடையும் காலத்துக்குள் 10 தவணைகளில் செலுத்த அனுமதி கோரியுள்ளார்.

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் அடிப்படை உரிமைகளை மீறியதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரி மற்றும் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குற்றவாளிகள் என்று ஜனவரி 12 ஆம் திகதியன்று உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று தற்கொலை தாக்குதல் நடத்தவுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்தும் அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க தவறிய பிரதிவாதிகளால் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி 100 மில்லியன் ரூபாயையும் பூஜித் ஜயசுந்தர மற்றும் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாயையும் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாயையும் சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவை தமது சொந்த நிதியில் இருந்து நட்டஈடாக செலுத்த வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

# ஜனாதிபதி, அமைச்சரை சந்தித்தார் இந்திய வெளிவிவகார செயலாளர்

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் தொடர்பாக வெளிவிவகாரச் செயலாளருடன் கலந்துரையாடியதாக அமைச்சர் சப்ரி தெரிவித்தார்.

மக்களின் பரஸ்பர நன்மைக்காக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# 9 பேருக்கு பல வகையான தண்டனைகள் விதிப்பு

பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தால் கடந்த பல வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மூன்று சுற்றிவளைப்புகளின் போது, பெரும் தொகையில் போதைப்பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருட்களை இறக்குமதி செய்தல், தம்வசம் வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளே இந்த ஒன்பது பேருக்கு எதிராகவும் சுமத்தப்பட்டிருந்தன.

2020.04.10 அன்று 45 கிலோ 654 கிராம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட ஈரான் பிரஜைகள் இருவர் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் ஐவருக்கு எதிரான வழக்கில், அவர்கள் அனைவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் 2023.06.26 ஆம் திகதியன்று 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

2016.12.13 அன்று 38 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டவருக்கு ஹோமாகம மேல் நீதிமன்றத்தால், 2023.06.28 அன்று வாழ்நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

2016.05.27 அன்று ஒரு கிலோ 744 கிராம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நைஜீரிய பிரஜைக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் 2023.07.06 அன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

# யாழ் – சென்னை இடையே தினசரி விமான சேவை

சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமான பயணம், ஜூலை 16 முதல் தினசரி சேவையாக மாற்றப்படும் என்று இந்திய மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறும் இந்திய பயண முகவர்கள் சங்கத்தின் 67 ஆவது ஆண்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

# சதொசவை மறுசீரமைக்க அமைச்சரவை அனுமதி

வர்த்தகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ சமர்ப்பித்த முன்மொழிவைத் தொடர்ந்து, திங்கட்கிழமை (10) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

லங்கா சதொச நிறுவனம் விரும்பிய முடிவுகளை அடையவில்லை அல்லது தேசிய பொருளாதாரத்துக்கு வினைத்திறனாக பங்களிக்கவில்லை என்று அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் தெரியவருகிறது.

லங்கா சதொச நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான செயற்பாட்டு மற்றும் கண்காணிப்புக் குழுவொன்றை நியமிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# கச்சத்தீவு மீட்பு வழக்கை இன்று விசாரிக்க முஸ்தீபு

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், கச்சத்தீவு மீட்பு வழக்கை அவசர வழக்காக எடுத்து விசாரணைகளை நடத்துமாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்தியா இடையில் 1974 ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், கச்சத்தீவில் பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தக்கூடாதென தெரிவிக்கப்பட்டுள்ளதாக சென்னை மீனவர்கள் நல சங்கத்தால் உயர் நீதிமன்ற கிளையில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த மாதம் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 22 மீனவர்களை மீட்கவும், 1974 ஆம் ஆண்டின் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை இரத்து செய்து கச்சத்தீவை மீட்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமெனவும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வழக்கை விசாரணை செய்து உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என திங்கட்கிழமை (10) விடுக்கபட்ட கோரிக்கைக்கு அமையவே மேற்குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# அரசாங்கத்தின் பயணம் சர்வாதிகார போக்குடையது

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்ட நிதி, பொருளாதார உள்ளிட்ட ஒட்டுமொத்த வங்குரோத்துக்கான உண்மையான காரணங்களை வெளிப்படையாக கண்டறியுமாறு ஐக்கிய மக்கள் சக்தி பல மாதங்களுக்கு முன்னர் சபாநாகரிடம் கோரிக்கை விடுத்தும் சுயாதீன தெரிவுக்குழுவொன்று அரசாங்க தரப்பிலிருந்து ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளை தவறவிட்டதன் விளைவாக மாற்றுத் தெரிவுக் குழுவை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளில் எதிர்க்கட்சி கவனம் செலுத்துவதாக குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பேரழிவால் அந்நியசெலாவணியை நாட்டிற்கு பெருமளவில் ஈட்டித் தரும் ஆடை ஏற்றுமதித் தொழிற்றுறை முகம் கொடுக்கும் சிக்கல், பின்னடைவு, வீழ்ச்சி என்பனவற்றால் பொருளாதார இருப்புக்கு ஏற்படுத்தப்போகும் எதிர்வினைகள் குறித்தும் கிராமிய பொருளாதார வீழ்ச்சி தேசிய பொருளாதரத்தில் செலுத்தும் தாக்கம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

> **இலங்கைக்கு ஜப்பான் பரிசளித்த ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை தனியாருக்கு விற்பனை செய்வதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன**

மின்கட்டண அதிகரிப்பாலும் அரசாங்கம் பொருந்திய சலுகையை இதுவரை வழங்காததாலும் மதஸ்தலங்கள் எதிர்நோக்கி வரும் மின் கட்டணம் செலுத்தல் சிக்கல்கள் பற்றி குறிப்பிட்டார்.

இந்தியாவை விடவும் எமக்கு முன்னுரிமையின் அடிப்படையில் ஜப்பான்-இலங்கை நட்புறவின் அடையாளமாக இலங்கையின் தொடர்பாடல் துறைக்கு ஜப்பான் பரிசளித்த இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை தனியாருக்கு விற்பனை செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

செலுத்த வேண்டியுள்ள 200 மில்லியனுக்கும் அதிகமான கடன், மின் கட்டண நிலுவை, மின் கட்டணம் செலுத்துவதற்கு பணியாளர்களின் சம்பள நிதி பயன்படுத்துவதால் எழுந்து வரும் பிரச்சினை குறித்தும் கருத்துரைத்தார்.

# கொட்டகலையில் ஆசிரியர் பயிற்சி பல்கலைக்கழகம்

அடுத்த வருடத்திற்குள் கல்வித்துறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டு இருபத்தியோராம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான மாணவரை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

நிலையான மற்றும் தரமான கல்வியை உருவாக்குவதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பல சீர்திருத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அதற்காக சர்வதேச தரத்திற்கு ஏற்ப பாடத்திட்டங்களை அறிமுகம் செய்வதுடன் மனித வளத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதாகவும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்வேறு நெருக்கடிகள் காரணமாக நிறுத்தப்பட்ட 'சுரக்ஷா' மாணவர் காப்புறுதித் திட்டம் 2024 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சர், "அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வி அமைச்சு, மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல. அந்நாடுகளில் கல்வி அமைச்சு மாகாண அமைச்சரின் கீழேயே உள்ளது.

எமது நாட்டில் 399 பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகள் அனைத்தும் மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ளன என்றார்.

# ரூ.100 கோடியை நெருங்கியது சுற்றுலாத் துறை வருமானம்

ஜூன் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் இலங்கை 158.4 மில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டியுள்ள நிலையில், ஜூன் மாதத்தில் இலங்கையின் மதிப்பிடப்பட்ட சுற்றுலா வருமானம் ஆண்டுக்கு ஆண்டு 45.1 சதவீதத்துக்கும் அதிகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

மே மாதத்தில் சுற்றுலாத் துறையின் வருமானம் 131.5 மில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், ஜூன் மாதத்தில் 100,388 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 648,775 வெளிநாட்டு பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தற்காலிக தரவுகள் மூலம் அறிய முடிகிறது.

# இந்தியாவும் இலங்கையும் விழிப்புடன் இருக்கின்றன

கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடி நிலை ஆகியவற்றின் மூலமான சவால்கள் ஊடாக இலங்கை பயணித்த காலப்பகுதியில், இந்திய அரசாங்கத்தின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அமைச்சுகளுக்கு இந்திய உயர் ஸ்தானிகராலயம் உறுதியான ஆதரவை வழங்கியிருந்தது.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிகளவான பெறுமதியாக 4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதி மற்றும் மனிதாபிமான ஆதரவு இந்தியாவால் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வருடத்தின் ஜனவரியில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதற்காக முதலில் நிதி உத்தரவாதத்தை வழங்கிய நாடு இந்தியா ஆகும். மேலும் ஜப்பான் மற்றும் பரிஸ் கிளப் ஆகியவற்றுடன் இணைந்து கடன் வழங்குனர்கள் சபையின் இணைத் தலைமையாக இந்தியா தொடர்ந்தும் ஆக்கபூர்வமான வகிபாகத்தை வழங்குமென்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

# கனகர் காணிகளை பகிர்ந்தளிக்கவும்

**40 நாள் அவகாசம் கொடுத்தார் ஆளுநர் செந்தில்**

வி.ரி. சகாதேவராஜா, பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்

33 வருடங்களாக காடுமண்டி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொத்துவில், கனகர் கிராம மக்களது காணிகள், எதிர்வரும் 40 தினங்களுள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அறிவுறுத்தியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்துக்கு செவ்வாய்க்கிழமை (11) விஜயம் செய்த ஆளுநர், சர்ச்சைக்குரிய கனகர் கிராமத்துக்கும் விஜயம் செய்தார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபன், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன், பொத்துவில் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பிரமுகர்கள்அங்கு சமூகமளித்திருந்தனர்.

கடந்த இரு மாதங்களாக இப் பிரதேசம் ஜேசிபி இயந்திரம் மூலம் துப்புரவாக்கப்பட்டு வருகிறது. பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உபதவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன், அரச அனுமதியுடன் இப்பணியில் ஈடுபட்டுவந்தார்.

பெருமாள் பார்த்தீபன் இங்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

“இங்கு வாழ்ந்து வந்த மக்கள், 1985க்குப் பின்னர் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனர். வாழ்ந்த 226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது. எம்மைப் பொறுத்தவரை அனைவருக்கும் இக் காணிகள் பகிரந்தளிக்கப்பட வேண்டும்” என்றார்.



ஆளுநர் செந்தில் தொண்டமான் அந்த இடத்திலேயே உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுத்து இன்னும் 40 நாள்களில் இக் காணிகள் பூரணமாக துப்புரவாக்கப்பட்டு உரிய, சகல மக்களுக்கும் பகிர்ந்தளிக்க பட வேண்டுமென கட்டளையிட்டார். அப்போது அங்கு கூடியிருந்த மக்கள் சந்தோசத்தில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

## 3 கொழுந்து திருடர்கள் தராசுகளில் சிக்கினர்

பாலித ஆரியவங்ச

அளவீடு தரநிலை சேவைத் திணைக்களத்தின் பதுளை மாவட்ட பிரிவால் திங்கட்கிழமை (10) மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, தரமற்ற தராசுகளைப் பயன்படுத்தி பச்சை தேயிலை கொழுந்து திருடினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பதுளை, அட்டாம்பிட்டிய மற்றும் அதனை அண்மித்த சிறு தேயிலைத்தோட்டங்களில் இருந்து பச்சை கொழுந்து கொள்வனவு செய்வோரால், தரமற்ற தராசுகளைப் பயன்படுத்தி கொழுந்து திருடப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலைச் சபையின் அங்கிகாரத்தை பெற்ற எழுவர் பயன்படுத்தும் தராசுகள் தர நிர்ணயம் செய்யப்பட்டன. அதில், மூவர் பயன்படுத்திய தராசுகளில் நிறை குறைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.



## கலபட தோட்டத்தில் நடைபாலம்



ராமு தனராஜா

நாவலப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள கலபட தோட்டத்தில் வாழும் மக்கள், தோட்டப் பிரதேசத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஓடையைக் கடந்தே தமது பயணங்களையும் கடமைகளையும் மேற்கொள்வது வழக்கமாகும். மழைக் காலங்களில் இவர்கள் பயணங்களை மேற்கொள்ளும்போது பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பது மட்டுமல்லாது, பாரிய விபத்துகளுக்கும் உயிராபத்துகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றார்கள்.

எனவே, கலபட தோட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு, இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால், நடை பாலம் நிர்மாணிக்கப்பட்டு, உதவும் கரங்கள் அமைப்பின் செயலாளரும் ஆசிரிய ஆலோசகருமான எஸ் தயாளன் ஆசிரியரால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.




பிளாஸ்டிக் பாவனையை ஒழிப்பதற்கு

## மாணவர்கள் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும்

**பசுமை வகுப்பறையை திறந்து வைத்து கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை தவிசாளர்**

அபு அலா

பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையிலிருந்து முற்றாக விடுபடவும், அதனை ஒழிப்பதற்கும் மாணவர்களாகிய நீங்கள் முன்னுதாரணமாகச் செயற்படவேண்டுமென கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையின் தவிசாளர் பி. மதனவாசன் தெரிவித்தார்.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, சாஹிரா கல்லூரி, சிங்கள மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பசுமை வகுப்பறைகளைக் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (10) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, உரையாற்றும்போதே மேற்படி தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

பசுமை வகுப்பறைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக வடிவமைக்கப்பட்ட கற்றல் சூழலாகும். இவை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பிளாஸ்டிக் பாவனையை கட்டுப்படுத்தல் போன்றவற்றை ஊக்குவிக்கும் ஓர் இடமாகவும் இருக்கும்.

இதனூடாக, சுற்றுச்சூழலை மதித்து எவ்வாறு வாழவேண்டும் என்பது குறித்து, மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வகுப்பறைகள் ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளன. மாணவர்களாகிய நீங்கள் இவ்வாறு செயற்படுவதன் மூலம் திருகோணமலை நகர் மட்டுமல்ல, எமது மாவட்டம், மாகாணம், நாடு முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணிக்கும் என்றார்.

மன்னம்பிட்டியில் விபத்துக்குள்ளான பஸ் குறித்த

## குற்றச்சாட்டுகளை கவனத்தில் கொள்ளாமல் விட்டது ஏன்?




நூருல் ஹுதா உமர்

மன்னம்பிட்டி பஸ் விபத்து போன்ற கோர விபத்துகள் இனிமேலும் இடம்பெறாமல், போக்குவரத்து அமைச்சும் மாகாண வீதி பயணிகள் அதிகார சபையும் பொலிஸ் திணைக்களமும் சில இறுக்கமான வேலை திட்டங்களை முறையாகச் செய்ய வேண்டுமென, அடிப்படை மனித உரிமைகள் மீறல் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம். ஏ நளீர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்படியான கவனயீனமான விபத்துகள், சாதாரண மக்களின் உயிருடன் விளையாடுவதாக அமைந்துள்ளது. இந்தப் பொடுபோக்கான செயலுக்கு பொறுப்பேற்கவேண்டியது யார்? இந்தப் பொடுபோக்கான செயலுக்குத் துணைபோன அதிகாரிகள், விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு கூறப்போகும் நியாயம் என்ன? குறித்த பஸ் தொடர்பில் தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் இருந்த சூழ்நிலையில், அதைக் கவனத்தில் கொள்ளாமல் விட்டது ஏன்? போன்ற கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

சரத் வீரசேகரா எம்.பிக்கு எதிராக

## ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

**அகில இலங்கை சைவ மகா சபை வலியுறுத்தல்**

எஸ். தில்லைநாதன்

ஆதிகாலம் தொட்டு தமிழர்களால் வழிபடப்பட்டு வந்த குருந்தூர் மலை ஆதிசிவன் கோவிலின் திரிசூலம் பற்றி, மிகத்தவறான கருத்துகளை பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரா பதிவு செய்துள்ளார். இங்கு 1,000 வருடங்களுக்கு முன்னதாகவே மிகத் தொன்மையான ஆதிசிவன் கோவில் அமைந்திருந்தையும் மிகப் பெரிய ஆவுடையார் உள்ளிட்ட சிவலிங்க பாகங்கள், நந்தி போன்றன மீட்கப்பட்டு இருந்ததையும் மேனாட்டு தொல்லியல் அறிஞர்களான எச். பி பெல், லூயிஸ் ஆகியோர் 18ஆம் நூற்றாண்டிலேயே அகழ்வாராய்ச்சிகளுடன் உறுதிப்படுத்தி இருந்தனர் என இலங்கை சைவ மகா சபை குறிப்பிட்டுள்ளது.

சரத் வீரசேகரா எம்.பியின் பாராளுமன்ற உரைக்கு கண்டனம் வெளியிட்டு, அகில இலங்கை சைவ மகா சபை விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில், தனது பேரினவாத அடக்குமுறை சித்தாந்தத்தை பிரதிபலித்து, மிக மோசமாக ‘தமிழ் நீதிபதி’ என விளித்து நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் சரத் வீரசேகரா பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை மிக மோசமான இனவாதம் ஆகும்.

இந்நிலையில், இன்றும் முற்றிலும் சைவத்தமிழர் வசிக்கும் இடத்தில், அவர்களின் வழிபாட்டுரிமைக்கு சவால் விடும் செயற்பாடுகளில், குருந்தூர் மலையில் அடாவடியாக ஈடுபட முனையும் வீரசேகராவுக்கு நீதிமன்ற உத்தரவுகள் விசனத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

இன மத நல்லிணக்கத்தையும் உயரிய நீதிமன்ற மாண்பையும் காக்கும் வகையில் நாட்டின் சகல முற்போக்கு சக்திகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களை பதிவு செய்ய வேண்டுவதுடன் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சைவத் தமிழ் மக்கள் சார்பாகவும் நீதிமன்ற மாண்பை மதிக்கும் நாட்டின் பிரஜைகள் சார்பாகவும் அகில இலங்கை சைவ மகா சபை வேண்டி நிற்கின்றது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4 கடைகள் உடைத்து கொள்ளை




பி.கேதீஸ், துவாரகஷான்

தலவாக்கலை நகரில் திங்கட்கிழமை (10) 4 கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா-ஹட்டன் பிரதான வீதியில் உள்ள மருந்தகம், வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம், ஹாட்வெயார் மற்றும் டயர் கடை ஆகியனவே இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளன.

ஹாட்வெயாரிலுள்ள மூன்று இலட்ச ரூபாய் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை, ஏனைய கடைகளில் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக கடை உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இவை தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

கிழக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின்

## பணிப்பாளராக மீண்டும் விமலராஜ் பதவி ஏற்பு

கனகராசா சரவணன்

அரசியல் இலாபங்களுக்காக என் மீது வீன்பழி சுமத்தியவர்களுக்கு இன்றைய நாள், ஒரு பதிலடியான நாளாக இருக்கும் என கிழக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளராக மீண்டும் பதவியேற்றுள்ள விமலராஜ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளராக கடமையாற்றிய விமலராஜ் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, கடமையில் இருந்து இடைநிறுத்திய நிலையில், மேல் முறையீட்டு நீதிமன்றில் அவர் வழக்கு தொடர்ந்து, விசாரணையின் முடிவில் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டு, மீண்டும் பதவியை வழங்குமாறு நிதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கமைய, தனது கடமையை திங்கட்கிழமை (10) சம்பிரதாய பூர்வமாக பெறுப்பேற்ற பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 12 வருடங்களுக்கு மேலாக, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிபாளராக திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் இவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## தங்கம் கடத்திய இரு வர்த்தகர்கள் சிக்கினர்

டி.கே.பி.கபில

இரண்டு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த வர்த்தகர்கள் இருவரை, கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் குழு, செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை கைது செய்துள்ளது.

கொழும்பு, வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடைய வர்த்தகர்கள் இருவரும் விமானங்களில் வெளிநாடுகளுக்கு அடிக்கடி விஜயம் செய்து, அங்கிருந்து பொருட்களை எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்கள் இருவரும் இந்தியன் எயார்லைன்ஸின் AI-273 விமானத்தில் சென்னையில் இருந்து செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை 02.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் அவர்களின் பயணப் பொதிகளில் 01 கிலோ 780 கிராம் எடையுள்ள இந்த நகைகளை கண்டுபிடித்துள்ளனர்.



**“ இந்தியன் எயார்லைன்ஸின் AI-273 விமானத்தில் சென்னையில் இருந்து செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை 02.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர் . பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகள் அவர்களின் பயணப் பொதிகளில் 01 கிலோ 780 கிராம் எடையுள்ள இந்த நகைகளை கண்டுபிடித்துள்ளனர்.**

தற்போது, இந்த இரண்டு நபர்களும் சட்டவிரோதமாக கொண்டு வந்த நகைகளுடன் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# வரப்பிரசாதத்துக்குள் ஒளிந்து இனவாதத்தைக் கக்கும் மக்கள் பிரதிநிதிகள்

பாராளுமன்றத்தில் உரையாற்றும் மக்கள் பிரதிநிதிகள் சிலரின் உரையின் சாராம்சத்தை பார்த்தால், விடயதானத்துக்கு பொருத்தமில்லாது, ஒருவரை ஒருவர் தூற்றுவதாக அமைந்திருக்கும். இன்னும் சிலர், இனவாதத்தை தூண்டும் வகையிலும் மதங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்தும் விதத்திலும் உரையாற்றியிருப்பர்.

அதனால்தான், சபைக்குள் கூறிய தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை, பொதுவெளியில் கூறுமாக பலரும் சவால் விடுவர். தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வரப்பிரசாதங்களை பயன்படுத்தி, பலரும் சபைக்குள் வாய்க்கு வந்தபடி உரையாற்றுவார். அந்த உரைக்கு எதிராக எவ்விதமான சட்டநடவடிக்கையும் எடுக்கமுடியாது. அதனால்தான் பொதுவெளிக்கு அழைப்பர்.

இல்லையேல், உறுப்பினரின் உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அங்கிகரிக்கப்பட்ட ஆவணமான ஹன்சாட்டில் இருந்தே அதனை அகற்றுவதற்கு அக்கிராசனத்தில் தலைமை தாங்குபவரால் அறிவுறுத்தப்படும். எனினும், பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடி அஞ்சல் செய்யப்படுவதால், அவ்வாறான உரைகள் எல்லாம் காற்றோடு கலந்துவிடும்.

வெடுக்குநாறி மலையில் என்னதான் நடக்கிறது என்பதை அவதானிப்பதற்காக முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் களவிஜயத்தை மேற்கொண்டிருந்தார். அங்கு சரத் வீரசேகர எம்.பியும் பிரசன்னமாய் இருந்தார். அப்போது, நீதவானிடம் தன்னை ஒரு பாராளுமன்ற உறுப்பினராக அறிமுகப்படுத்திய சரத் விஜயசேகர ஏதோவொன்றை கூற முனைந்தார்.

எனினும், நீதிமன்ற விசாரணையின் இருக்கும் வழக்குத் தொடர்பில் களவிஜயம் மேற்கொண்டிருப்பதால், சரத் வீரசேகரவின் கருத்துக்கு செவிமடுக்காத நீதவான், அரசியல்வாதிகளுக்கு இவ்விடத்தில் கருத்துரைப்பதற்கு இது தருணமல்லவென மறுத்துள்ளார்.

அப்போது எதையும் கூறாது, அவ்விடத்திலிருந்து வெளியேறிய சரத் வீரசேகர, தன்னுடைய சிறப்புரிமைகளை பயன்படுத்தி பாராளுமன்றத்தில், "தமிழ் நீதிபதிகள் இனவாதிகள்; அவர்களால், எங்களுடைய பயணத்தை தடுக்கமுடியாது" என இனவாதத்தை கக்கிவிட்டார்.

இனங்களுக்கு இடையில் மீண்டும் பிரச்சினைகள் ஏற்படவேண்டும். அதில் குளிர்காய்வதற்கு சிலர் முயலுகின்றனர் என்பதெல்லம் தெட்டத்தெளிவாகத் தெரிக்கின்றது. அதேபோல, வெடுக்குநாறி மலையில், மேலதிக நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளக்கூடாதென நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையிலேயே முழு விகாரையும் கட்டி முடிக்கப்பட்டது.

ஆக, சட்டத்தையும் ஒழுங்கையும் அமல்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் நிறுவனங்கள், எந்தவொரு நீதிமன்றமாக இருந்தாலென்ன நீதிமன்றங்களின் உத்தரவுகள், கட்டளைகள், பரிந்துரைகளை அச்சொட்டாக கடைப்பிடிக்க வேண்டும். சரத் வீரசேகரவின் உரையின் சாராம்சத்தை நோக்குமிடத்து, தமிழ் நீதிபதிகளின் உத்தரவுக்கு கட்டுப்படவேண்டிய அவசியமில்லை என்பதாகும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது கானல் நீராகவே இருக்கின்றது. எனினும், முயற்சிகள் இன்னும் தொடர்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடெல்லி விஜயத்தின் போது, அதுவும் ஒரு முக்கிய கருப்பொருளாக இருக்கிறது.

வரப்பிரசாதங்களுக்குள் ஒளிந்துகொண்டு இன, மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் கருத்துகளை கக்காமல், விடயதானத்துடன் இயைந்துசெல்லும் நல்ல கருத்துகளை முன்வைப்பதே மக்கள் பிரதிநிதிகளுக்கு அழகு மட்டுமல்ல; அவர்களுடைய பொறுப்பும் கூட!

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# குற்றவாளியே குற்றவாளியை தேடும் விசித்திரமான நாடு



எம்.எஸ்.எம் ஐயூப்

பொருளாதார ரீதியாக இலங்கை வங்குரோத்து நிலைமையை அடைந்தது எவ்வாறு என்பதை ஆராய, கடந்த வியாழக்கிழமை (06) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 14 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவை நியமித்தார். அதன் தலைவராக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் சாகர காரியவசம் நியமிக்கப்பட்டு உள்ளார்.

பவித்ரா வன்னிஆரச்சி, டி.வி சானக்க, விஜித்த ஹேரத், மஹிந்தாநந்த அலுத்கமகே, எரான் விக்கிரமரத்ன, ஜயந்த கெட்டகொட, ஹர்ஷன ராஜகருணா, மேஜர் பிரதீப் உந்துகொட, சஞ்ஜீவ எதிரிமான்ன, நாலக்க பண்டார கோட்டேகொட, சாணக்கியன் இராசமாணிக்கம், பேராசிரியர் ரஞ்ஜித் பண்டார ஆகியோர் தெரிவுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

தெரிவுக்குழுவின் தலைவராக காரியவசத்தின் பெயரை சபாநாயகர் அறிவித்தவுடன், அதை எதிர்த்து எதிர்க்கட்சியினர் சபையில் கூச்சலிட்டனர். அதற்குக் காரணம் காரியவசம், முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவாக இருப்பதாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாக இருந்தவர்களில் ஒருவரான பசிலின் நண்பர் ஒருவர், அதே பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை ஆராயும் தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு இருப்பதாக அவர்கள் வாதிட்டனர்.

பசில் ராஜபக்ஷ, அவரது சகோதரரான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கடமையாற்றியதோடு, மற்றொரு சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிதி அமைச்சராகவும் இருந்தார். அவர் பல ஊழல்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினரால் கடந்த காலங்களில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இந்த தெரிவுக்குழுவைப் பற்றி, சபாநாயகர் சபையில் அறிவித்த கடந்த வியாழக்கிழமையே நீண்டகாலமாக எதிர்ப்பார்க்கப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான விவாதமும் நடைபெற்றது. அச்சட்ட மூலம் தொடர்பான இரண்டாம் வாசிப்பின் பின்னர், அந்தச் சட்டமூலம் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன் மூன்றாம் வாசிப்பு அல்லது குழுநிலை விவாதம், எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது உரையாற்றிய சகல உறுப்பினர்களும், சுதந்திரத்தின் பின்னர் நாட்டை ஆட்சி புரிந்த சகல கட்சிகளும், பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கூறினர். அதாவது அவர்கள், நாடு வங்குரோத்து நிலையை அடைந்தமைக்கு தமது கட்சிகளும் காரணமாக இருந்ததை ஏற்றுக் கொண்டனர்.

சகல கட்சிகளும், பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அவர்கள் கூறும் போது, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராவது - குறைந்த பட்சம் "கடந்த 75 வருடங்களாக ஆட்சி புரிந்த கட்சிகளே பொருளாதரத்தை அழித்தன" என்று கூறிவரும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களாவது - "எமது கட்சி இதற்குக் காரணமாக இருக்கவில்லை" என்று கூறவில்லை.

"நாட்டை ஆட்சிபுரிந்த சகல கட்சிகளும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருபுறம் கூறுகிறார்கள். மறுபுறம், அதேகட்சிகளின் உறுப்பினர்கள், தெரிவுக்குழு அமைத்து அந்த நெருக்கடிக்கு காரணமானவர்கள் யார் என்று ஆராயப் போகிறார்கள். அந்தத் தெரிவுக்குழு, குற்றவாளிகளை கண்டறியுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மேற்படி ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமானது, அரசாங்கம் ஊழலுக்கு எதிரானது என்பதாலோ அல்லது பிரதான எதிர்க்கட்சிகள் ஊழலுக்கு எதிராக செயற்படுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தியதாலோ கொண்டுவரப்பட்ட சட்டமூலம் அல்ல!

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடிய நிலையில், அந்நிதியம் விதித்த நிபந்தனைகளின் ஒன்றின் அடிப்படையிலேயே இந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

கடந்த வருடம், கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்த நாள் முதல், அந்நிதியம் அரசாங்கத்தின் நிதி நிலையை பலப்படுத்துவதற்காக அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் பலவற்றை பரிந்துரைத்துள்ளது. அதன்படி, அந்நிதியத்தின் அதிகாரிகள் இலங்கையில் ஊழலை கட்டுப்படுத்தும் அவசியத்தை வலியுறுத்தி வருவதோடு, அதற்காகப் பலமான ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் அவசியத்தையும் வலியுறுத்தி வந்தனர். அதன் விளைவே இந்தச் சட்டமூலமாகும்.

இலங்கையின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்ததற்குக் காரணம் என்ன, அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை ஆராய்வதன் அவசியத்தை நிராகரிக்க முடியாது. அதை மக்கள் அறிந்திருக்க வேண்டும். ஆயினும், யார் அதை ஆராய்ந்து கண்டறிவது என்பது, சர்ச்சைக்குரிய விடயமாகும்.

குறிப்பாக, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளே பொருளாதார சீர்குலைவுக்குப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அக்கட்சிகளின் உறுப்பினர்களே பாராளுமன்றத்தில் கூறும் நிலையில், அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவுக்குழு அமைத்து, அதை ஆராயப் போகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாகும்.

இவர்கள், ஆராய்ந்தாலும் இல்லாவிட்டாலும் பொதுமக்களிடமும் சர்வதேச சமூகத்திடமும் இது தொடர்பாக பொதுவானதோர் அபிப்பிராயம் இருக்கிறது. பொதுமக்களின் கருத்து, கடந்த வருடம் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் மூலம் வெளிவந்தது. பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் திருடர்கள் என்று முழங்கப்பட்ட சுலோகத்தின் மூலம், அது தெளிவாகத் தெரிகிறது. அது திடீர் உணர்ச்சி வேகத்தில் முழங்கப்பட்டதா அல்லது அறிவுபூர்வமாக கூறப்பட்டதா என்பது, எதிர்வரும் தேர்தல்களின் போதுதான் தெரியவரும்.

இதுவரை நாட்டை நிர்வகித்த அரசாங்கங்களின் நிர்வாகச் சீர்கேடும் குறிப்பாக, அரச இயந்திரத்துக்குள் பரவியிருக்கும் ஊழலுமே தற்போதைய நிலைக்கு காரணம் என்பதை, சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது. கடந்த வருடம் மே மாதம் 26ஆம் திகதி, சுவிட்சர்லாந்தில் டெவோஸ் நகரில் நடைபெற்ற உலக பொருளாதார பேரவையின் கூட்டத்தில் கலந்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, முறையற்ற நிர்வாகமே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என இந்திய தொலைக்காட்சியான NDTVக்கு அளித்த நேர்காணலில் கூறியிருந்தார்.

அதேவேளை, கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூடியபோது, அதில் மனித உரிமைகளுக்கான பதில் ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையிலும், மனித உரிமைகள் மீறல்களுக்கு தண்டனை வழங்காமையும் பொருளாதார குற்றங்களுமே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படையான காரணம் எனக் குறிப்பிடப்பிட்டு இருந்தது.

ஐ.நா அறிக்கையில், 'பொருளாதார குற்றங்கள்' (economic crimes) என்ற பதம் உபயோகிப்பட்டதற்கு இலங்கை அரசாங்கம், தனது எதிர்ப்பை தெரிவித்த போதும், பொருளாதார குற்றங்கள் என்ற பதத்துடன் 'டிரான்ஸ்பெரன்ஸி இண்டர்நஷனல்' நிறுவனம் ராஜபக்ஷர்களுக்கும் அவர்களுடன் தொடர்புடைய சில அதிகாரிகளுக்கும் எதிராக சமர்ப்பித்த மனுவை விசாரிக்க, இலங்கையின் உயர்நீதிமன்றம் கடந்த ஒக்டோபர் மாதம் இணக்கம் தெரிவித்தது.

இலங்கையின் பொருளாதார சீரழிவுக்கு, நாட்டை நிர்வகித்த சகல கட்சிகளும் பொறுப்புக் கூற வேண்டும் என்பது உண்மையே! ஆயினும், அந்த விடயத்தில் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் ஆற்றிய பங்கு, ஏனைய அரசாங்கங்களின் பங்கைப் பார்க்கிலும் மிகவும் பாரியதாகும். மிகக் குறுகிய காலத்தில், அவ்வரசாங்கம் எடுத்த சில முடிவுகள், நாட்டை வங்குரோத்து நிலைக்கு எடுத்துச் சென்றது.

அவர் பதவிக்கு வந்து சில மாதங்களில் மேற்கொண்ட பாரிய வரி குறைப்பால், அரசாங்கத்துக்கு வருடமொன்றுக்கு 65,000 கோடி ரூபாய்க்கு மேல் நட்டம் ஏற்பட்டது. அதையடுத்து 2021ஆம் ஆண்டு அவரது அரசாங்கம் இரசாயன உர இறக்குமதியை தடை செய்ததால், நாட்டின் விவசாயம் ஏறத்தாழ அழிந்தே போய்விட்டது. டொலர் சம்பாதிக்கும் பெருந்தோட்டத்துறை வெகுவாக பாதிக்கப்பட்டது. டொலருக்கான கேள்வி வேகமாக அதிகரிக்கும் நிலையில் டொலருக்கு கட்டுப்பாடு விலையை நிர்ணயித்ததில், ஒரு வருட எண்ணெய் இறக்குமதிக்கு தேவையான 5.5 பில்லியன் டொலர் வெளிநாட்டு செலாவணியை மத்திய வங்கி இழக்க நேரிட்டதாக மத்திய வங்கி அதிகாரிகள் 'கோப் குழு' விசாரணையின் போது தெரிவித்தனர்.

இறுதியில் நிலைமையை சீர் செய்வதற்கான ஒரே வழியான சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதையும் சுமார் ஒரு வருட காலம் தாமதித்தே அவர் மேற்கொண்டார். அதனால், கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நாடு வங்குரோத்து அடைந்ததாக அறிவிக்க வேண்டியதாகியது.

இத்தனை முறைகேடுகள் இடம்பெறும் போதும், ஆளும் கட்சியில் இருந்த பொருளாதார நிபுணர்கள் என்று கூறிக் கொள்வோர், தமது பதவிகளையும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அவை அத்தனையையும் நியாயப்படுத்தினர். இப்போது, அவர்களே நாடு எவ்வாறு வங்குரோத்து நிலையை அடைந்தது என்று ஆராயப் போகிறார்கள்.



## வாழ்வியல் தரிசனம்

மனிதரை மனிதர் இரசிக்க வேண்டும். எவரையும் கண்டுகொள்ளாமல், மதிக்காமல், பழகாமல் கண்களை மூடிக்கொண்டு வாழக்கூடாது.

இந்த உலகத்தில்தான் வாழுகின்றோம். வேற்றுக்கிரகத்தில் இருந்து வரவில்லை. வெளிநாடுகளில், காலை நேரத்தில் எவரைக் கண்டாலும் கையசைத்து, 'ஹாய்' என்று அவர்களைப் பார்த்து, புன்முறுவலுடன் கூறுவார்கள்.

ஆனால், எங்கள் சனங்கள், தங்களுக்குத் தெரியாதவர்களை முழுமையாக நிராகரித்துவிடுவார்கள். எவரையும் நிராகரித்தால், வெறுக்கும் மனநிலைக்கே தள்ளப்பட்டுவிடுவார்கள்.

ஆனால், பொல்லாத கெட்டவர் என்று தெரிந்தால் கண்டுகொள்ளாமல் போகலாம். ஒருவரைப் புரியாமல் நட்புக்கொள்ளவும் கூடாது. பஸ்ஸில் ஒருதடவையில் பார்த்ததுமே, காதல் கொள்வது சரிவருமா? முழுமையான காதலா இது?

துஷ்டர்கள் காதல் எனும் பெயரில் நடித்து, வலை வீசுகிறார்கள். பல இளைய தலைமுறையினர் எதையும் ஆராய்வதில்லை. பிறர் புத்திமதிகளைக் கேட்பதுமில்லை.

பொதுமைப் பண்பாடுகளில் இருந்து விலகலாகாது. மனிதனை மனிதன் அன்பு செலுத்த வேண்டும். புவனத்தில் பிறக்கும் குழந்தைகள், நற்குணத்துடன் தான் பிறக்கின்றன. அவர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தவேண்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மட்டு. வாவியில் ஆற்றுவாழைகளால் மீனவர்கள் அவதி; மீன்பிடி பாதிப்பு

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவி, பெருகிவரும் ஆற்றுவாழைத் தாவரங்களால் அழிவடைந்து வருவதுடன், மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறித்த வாவியில் மீன்கள் பாடலிசைத்ததால் 'பாடும் மீன்கள் வாழும் வாவி' என குறித்த வாவி சர்வதேச புகழ் பெற்றது.

குறித்த மட்டக்களப்பு வாவியில், சுமார் 15 ஆயிரம் மீனவ குடும்பங்கள், மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வாவியில் ஆற்றுவாழைத் தாவரம் பெருமளவு பெருகிவருவதால், மீனவர்கள் தமது தோணிகளைத் தள்ள முடியாமல் அவதியுறுவதாகத் தெரிவிக்கின்றனர்.

முதலை, பாம்பு போன்ற உயிருக்கு அச்சுறுத்தலான உயிரினங்கள் இந்த ஆற்றுவாழைகளுக்குள் மறைந்து இருப்பதாக மீனவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு வாவியையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் அழித்துவரும் ஆற்றுவாழைகளை அகற்றித்தருமாறு, உரிய அதிகாரிகளிடம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரீ.எல் ஜவ்பர்கான்



# மடமும் மடக் கட்டடக்கலையும்





எம்.எப். பாத்திமா சபா
இரண்டாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

மடம் என்றால் மடாலயம் என்ற சொல்லாலும் அழைக்கப்படுகின்றது. பொதுவாக முனிவர்கள், துறவிகள், யாத்திரிகர்கள் தங்குமிடம் மடம் என்று சொல்லப்படும். அதுமட்டும் அல்லாமல், ஆலயங்களில் யாத்திரிகர்களும் பக்தர்களும் தங்கி, இளைப்பாறும் இடமாக இது காணப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கு பண்பாட்டில் சமய நம்பிக்கையின் அடிப்படையில், மடங்கள் தோன்றியிருப்பினும் இவை சமயம் சாராதவையாகவும் சமூக தேவையின் பொருட்டும் சில நேரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து வசதியோ தொழில்நுட்ப வசதியோ குன்றிய அன்றைய காலங்களில், மடங்களின் தேவை இன்றியமையாததாகவே இருந்துள்ளன.

அன்றைய காலங்களில், நடை பயணமாகவோ மாட்டு வண்டியிலோ பயணித்த அதேபோன்று போக்குவரத்து வசதி குன்றிய காலத்தில், தத்தம் களைப்பை போக்கிக் கொள்ள மற்றும் இளைப்பாறவென இளைப்பாற்று மடம் மற்றும் வழிப்போக்கு மடம் என்பனவற்றையும் அமைத்துள்ளனர். குறிப்பாக மடங்கள் தெருவோரங்களில் மட்டும் இன்றி வயற்கரை, கடற்கரை போன்றவற்றிலும் தொழிலில் ஈடுபடுவோர் இளைப்பாற தக்கதாக அமைக்கப்பட்டுள்ளன. அதாவது இளைப்பாற்றுத் தேவை என்பது எங்கெங்கு இருந்தனவோ அவ்விடங்களில் எல்லாம் இவ்வாறான மடங்கள் உருவாக்கப்பட்டு, ஏனைய இடங்களை விடவும் பல்கி பெரியதாகவும், அதேவேளை வேறுபாடுடையதாகவும் காணப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் குறிப்பாக வடகிழக்கில் தோன்றிய பெரும்பான்மை மடங்கள் எல்லாம், சமயம் வளர்ப்பதற்கான இடமாகவும் சமய நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்தனவாகவும் காணப்படும் அதே வேளை, அவை சமூகத் தேவையும் பூர்த்தி செய்தன என்பதே உண்மை. பெரும்பாலும் வடகிழக்கில் சைவ, கிறிஸ்தவ மக்கள் சமயத் தேவைகளின் அடிப்படையில் பெரும்பாலான மடங்களை அமைத்துள்ளனர். ஆரம்ப காலங்களில் பௌத்த மக்களினுடைய பண்பாட்டிலும் மடம் அமைக்கும் வழக்கம் காணப்பட்டுள்ளது. இந்த வகையில், மட கட்டடக் கலையை நோக்கும் போது குறிப்பாக சமூக பண்பாட்டு நடைமுறை என்பது வேறு எந்த கலையையும் விட கட்டடத்தில் மிகவும் யதார்த்தமாக பௌதீக உருப்பெற்று விளங்குகின்றது என்பதை எங்களால் அவதானிக்கலாம்.

அவ்வகையில், மடங்களுக்கான உருவாக்கத்திற்கு மிக அடிப்படை பின்புலமாக தேவைப்படுவது சமய நம்பிக்கை மற்றும் பொருளாதார பின்னணியாகும்.புவியியல் ரீதியாக ஒதுக்குப்புறம், கடற்கரையுடன் கூடிய இயற்கை சூழல், ஆலய வழிபாடு, கூட்டு பிரார்த்தனை, அன்னதான உணவு என்பவை தம்மை தம் மனநிலையை மறந்து இன்னொரு நிலையில் அல்லது இன்னொரு உலகில் வாழ்தல் போன்ற புதிய மனநிலையை ஏற்படுத்தி ஏனைய மக்களுடன் ஒன்றுபடவும் வைக்கின்றது. இவ்வாறு ஏனையோருடன் ஒன்றுபடல், அவர்களுடன் உரையாடுதல், அவர்கள் பிரச்சினைகளை அறிதல் என்பவற்றைத் தருவதுடன், தம்முள் ஆழ்ந்து சிந்திக்கவும் வைக்கின்றது. இதனூடாக தத்தம் பிரச்சினைகளுக்குத் தீர்வும் காண்கின்றனர்.

மேலும் ஒவ்வொரு சமூகத்திலும் இம்மடங்கள் மாலை நேரத்தில் பொழுதுபோக்கும் ஓய்விடமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இம்மடங்களில் காணப்படக்கூடிய கட்டடக்கலை நுட்பங்களை நோக்குமிடத்து மடங்களின் உருவாக்கத்திற்கு மிக முக்கிய இடம் பெறுவது திண்ணை எனலாம். குறிப்பாக மடங்களில் தூண்களை தாங்குகின்ற உயர்ந்த மேடைகளும் திண்ணைகளும் காணப்படுவது வழக்கமாகும். அதிலும் இளைப்பாற்று மடம் முற்று முழுதாக திண்ணையை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது.

ஆரம்பகால மடங்களின் கூரைகள் எளிமையாக ஓலையால் வேயப்பட்டவையாகவும் அவை ஊசி கால் கூரை எனப்படும் கூரை அமைப்பை உடையதாகவும் காணப்பட்டுள்ளன. காலங்கள் நகர இவை ஓட்டால் வேயப்பட்டதாகவும் பிறகு சீற்றால் ஆனதாகவும் பின்னர் சில கொங்கிறீற்றால் போடப்பட்ட தட்டை கூரைகளை கொண்டதாகவும் காணப்பட்டிருக்கின்றன.

மடங்கள் பல வகைகளில் தோற்றம் பெற்றுள்ளன. குறிப்பாக இந்து சமய கோவில்களின் அடிப்படையில் உருவானவற்றில் ஒன்றுதான் தண்ணீர் பந்தல் மடமாகும். இதுவும் இளைப்பாறும் மடம் போன்று மிக எளிமையான வடிவமைப்பை கொண்டு காணப்படுகின்றது. இது அனேகமாக தற்காலிகமானதாக ஓலையாலோ கிடுகாலோ அமைக்கப்பட்ட சிறிய அறை போன்று காட்சி தரும்.

தண்ணீர் பந்தல் மடங்களின் அடுத்த கட்டமாக அன்னதான மடங்களை நோக்கலாம். இவை அதன் பெயரிற்கேற்ப பலருக்கு ஒரே நேரத்தில் உணவளிக்கத் தக்கதாக பெரிய மண்டபமாகவும் அதன் பின்பகுதியில் உணவு சமைப்பதற்கும் பொங்குவதற்கும் அப்பொருட்களை வைப்பதற்குமென அறைகளையும் கொண்டிருக்கும். அன்னதான மடத்திற்கு எடுத்துக்காட்டாக நயினாதீவு 'அமுதசுரபி' அன்னதான மடத்தினை குறிப்பிடலாம். இது நீண்ட பெரிய மண்டபத்தையும் உட்பகுதியின் இரு கரைகளிலும் ஒவ்வொன்றாக இரண்டு காரியால அறைகளையும் பிற்பகுதியில் சமையல் பகுதியையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

அன்றைய காலங்களில், அன்னதான மடங்களை பொறுத்தவரையில் இரு பக்கமும் முற்றாக சுவரால் அடைக்காது, அரைச்சுவர்களுடையதாகவே காணப்பட்டன. ஆனால், இன்று அவை ஜன்னல்களாலும் கம்பிகளாலும் அடைப்புகளாலும் அடைக்கப்பட்டு மூடிய கட்டடங்களாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சில கோவில்களுக்கு அருகே உள்ள மடங்கள் தர்மசத்திரம், அன்னதானம், தண்ணீர் பந்தல் என பல தேவைகளை நிறைவேற்றுகின்றனவாகவும் காணப்பட்டுள்ளன.

அடுத்து, யாழ்ப்பாணத்தில் மடங்களின் கட்டடக்கலை பாரம்பரியத்தின் சிறந்ததும் மிகவும் பழைமையானதுமான மடத்தை நோக்குவோமாயின் யாழ்ப்பாணத்தில் மட்டும் இன்றி இலங்கையிலேயே சைவ சமயம் சார் மிகப்பெரிய மட கட்டடமாகவும் விளங்குவது 'சிறாப்பர்' மடமேயாகும். இது காங்கேசன்துறையில் இருந்து கீரிமலை நோக்கி வரும் சந்தியின் தெற்காகவும் நகுலேஸ்வரர் கோவிலின் வடக்காகவும் அமைந்துள்ளது. இம் மடமும் முருகக்கல், வெள்ளைக்கல், செங்கல் போன்றவை கலந்து கட்டப்பட்டதுடன் இதன் கூரை பீலி ஓடு எனும் ஓட்டால் ஆனதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இம்மடம் பற்றிய பல்வேறு விடயங்களை அதற்கு அருகில் இருக்கின்ற கல்வெட்டின் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

இந்த மடத்தின் நடுமுற்றத்தின் மேற்பக்க அறைகளில் விநாயகர் கோவில் காணப்பட்டுள்ளது. ஆனால், இன்று அதற்கான பீடம் மட்டுமே உள்ளது; விக்கிரகம் இல்லை. இது மட்டுமன்றி, இங்கு ஒரு நூல் நிலையமும் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலும் மடக்கட்டடக் கலையின் பயன்பாடு அதிகமாகவே காணப்படுகின்றது. உதாரணமாக மண்டூர் கந்தசுவாமி கோவில் மடம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரம் கோவில் மடம், களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் கோவில் மடம், போரதீவு பத்திரகாளி அம்மன் கோவில் மடம், வெருகல் சித்ரவேலாயுத சுவாமி கோவில் மடம் போன்றவற்றை உதாரணமாக குறிப்பிடலாம்.

இவ்வாறு காலத்திற்கு காலம் உருவாக்கப்பட்ட மடக்கட்டடங்களின் பின்னால், மடத்தின் போஷகனின் கருத்து நிலையும் முக்கிய இடம் பெறுகின்றது. ஏனெனில் போஷகன் சமயம் பற்றியும் அதன் நம்பிக்கை பற்றியும் பொது நலன் பற்றியும் கொண்டுள்ள கருத்தியல் தான், அவனை மடங்களைக் கட்டத் தூண்டுகின்றது. எனவேதான் நமது தேவை, பண்பாடு என்பவற்றின் அடியாக எழுந்த மட கட்டடங்கள் இன்று, பண்பாட்டு மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றம் கண்டு வருகின்றன. இதனால் இன்று மடக்கட்டடங்கள் மாறுபட்டும், பாவனை குறைந்தும் வருகின்றன.

வாகனங்களின் வருகை இளைப்பாற்று மடங்களை பஸ்தரிப்பு நிலையங்களாகவும், அன்னதான மடங்கள் மற்றும் குருபூஜை மடங்களை வெறும் அன்னதான அடிப்படையாக மட்டும் இன்றி கல்யாண மண்டபங்களாகவும் மாற்றி வருகின்றனர். இவ்வாறாக மடங்கள் மாற்றம் கண்டது மட்டுமன்றி, எமது பழைய மடங்கள் அழிந்தும் அழிக்கப்பட்டும் விட்டன.







## 'காணிக்கு குருநாதன்' நூல் வெளியீடு

எம்.ஆர்.எம் றஜாய் எழுதிய 'காணிக்கு குருநாதன்' எனும் நூல் வெளியீடும் கௌரவிப்பும், கிழக்கு மாகாண குடியேற்ற உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் கல்முனை கிருஸ்டா இல்ல மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.
அம்பாறை மாவட்ட தலைமைப்பீட காணி உத்தியோகத்தர் கே.எம் முஸம்மில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, பொத்துவில், லகுகல பிரதேச செயலாளர்கள் உட்பட, கிழக்கு மாகாண பேரவையின் உதவி செயலாளர் எம்.சி அன்சார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாறுக் ஷிஹான்

## 'விலையுயர்ந்த விதைகள்' நூல் வெளியீடு



வே. முத்தையாவின் 100ஆவது அகவை நிறைவையொட்டி, கவிஞர் கெங்கா ஸ்ரான்லி எழுதிய 'விலையுயர்ந்த விதைகள்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா, நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.
பேராசிரியர் முனைவர் சி. சிவலிங்காராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம், சட்டத்தரணி சுதா கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டதுடன் நூலின் முதற்பிரதியை லயன் குமாரசாமி ஜெயந்தன் பெற்றுக்கொண்டார். வெளியீட்டு உரையை கவிஞர் ரஜிதா அரிச்சந்திரனும் மதிப்பீட்டுரையை கவிஞர் வைரவநாதன் வசீகரனும் வாழ்த்துரையை ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் சதா கனகலிங்கமும் நிகழ்த்தினார்.

நிதர்சன் விநோத்

## கண்காணிப்பு கூடம் கையளிப்பு



புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரிச் சங்கத்தால் புதுப்பிக்கப்பட்ட பொலிஸ் கண்காணிப்புக் கூடம், புத்தளம் பொலிஸ் நிலையத்திடம் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (08) புத்தளம் நகரத்தில் நடைபெற்றது. இக்கண்காணிப்புக் கூடத்தை டீஐஜீ நாலக டி சில்வா மற்றும் புத்தளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குலதுங்க ஆகியோர் திறந்துவைத்தனர்.
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.எஸ்.கே ரூபசிங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகளும், புத்தளம் வர்த்தக நலன்புரி சங்கத்தின் தலைவர் வை.எம் நிஸ்தாத், செயலாளர் இஹ்ஸாஸ் இல்யாஸ் உட்பட நிர்வாக உறுப்பினர்களும் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

எம்.யூ.எம் சனூன்




## நுவரெலியா ரோட்டரி கழகத்தின் புதிய தலைவர்

நுவரெலியா ரோட்டரி கழகத்தின் 58 ஆவது தலைவராக யாதவசிவம் சவீஸ்கரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் பதவியேற்பு வைபவம் நுவரெலியா கிறேண்ட் சுற்றுலா விருந்தகத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.
இக்கழகத்தின் 2023 /2024 ஆண்டுக்கான புதிய செயலாளராக பி. பாலசுப்பிரமணியமும் பொருளாளராக ஆர். சதீஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.
நுவரெலியா ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட உறுப்பினருமான வீ. ஆதிமூலம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், பிரதம அதிதியாக ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரம், ரோட்டரியன் வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி ஆகியோர் கலந்துகொண்டனர்.

எஸ்.கே குமார்



## கல்முனை ஸாஹிரா பழைய மாணவர் சங்கத்துக்கு அலுவலகம்



கல்முனை ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்க அலுவலக திறப்புவிழாவும் முகாமைத்துவ சபை சந்திப்பும் வெள்ளிக்கிழமை (07) கல்லூரி வளாகத்தில் கல்லூரியின் முதல்வரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான எம்.ஐ ஜாபீர் தலைமையில் நடைபெற்றது.
கல்லூரி முதல்வரால் அலுவலக கட்டடம் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர், காரியப்பர் மண்டபத்தில் ஏனைய நிகழ்வுகள் இடம்பெற்றன.
இங்கு, சட்ட ஆலோசகராக எம்.எஸ்.ஏ சாரிக் காரியப்பர், கணக்காய்வாளர் ஏ. நிசாப்தீன், ஊடக இணைப்பாளர்களாக எம்.வை அமீர், எம்.ஐ.எம் அஸ்ஹர் ஆகியோருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. பழைய மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் டொக்டர் எம்.என்.எம் தில்ஷான் முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பில் கருத்துரை வழங்கினார்.

நூருல் ஹுதா உமர்

## கிழக்கு பல்கலைக்கழகத்தில் COOP Fresh பல்பொருள் விற்பனை நிலையம்




கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட வளாகத்தில் COOP Fresh பல்பொருள் விற்பனை நிலையம் திங்கட்கிழமை (10) திறந்துவைக்கப்பட்டது.
மட்டக்களப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தேசகீர்த்தி நா. சசிகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வீ. கனகசிங்கம், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான என். சிவலிங்கம், பிரதி உபவேந்தர் பேராசிரியர் கே.ஈ கருணாகரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ரீ. சதானந்தன் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வீ தங்கவேல், கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ. பகீரதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எம்.எஸ்.எம் நூர்தீன்



## ஒன்று கூடலும் பணிநிறைவு பாராட்டு விழாவும்

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91 /92 ஆம் ஆண்டு அணியின் மூன்றாவது ஒன்று கூடலும் பணிநிறைவு பாராட்டு விழாவும் அணித்தலைவர் வி.ரி சகாதேவராஜா தலைமையில் சனிக்கிழமை (08) மல்வத்தையில் நடைபெற்றது.
குறித்த அணியின் உறுப்பினர்களான அதிபர் பொன் நடராஜன், ஆசிரியை திருமதி வசந்தினி நடராஜன் தம்பதியர், ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதால் அவர்களுக்கான பணிநிறைவு பாராட்டு வைபவமும் நடைபெற்றது.
இந்த ஒன்றுகூடலில் திருகோணமலை தொடக்கம் திருக்கோவில் வரையான பிரதேசங்களில் இருந்து 39 ஆசிரியர்கள் உணர்வு பூர்வமாக கலந்து மகிழ்ந்தனர்.

வி.ரி சகாதேவராஜா



எல் ஜிடோ

# ஸ்பெயினுக்கு 300 பேருடன் பயணித்த 3 படகுகள் மாயம்




செனகல் நாட்டில் இருந்து ஸ்பெயினுக்கு 3 படகுகளில் பல்வேறு காரணங்களால் புலம்பெயர முயன்ற 300 பேரை காணவில்லை என்ற தகவல் வெளியாகி உள்ளது. இந்த தகவலை ஸ்பெயின் நாட்டு உதவிக் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் 23ஆம் திகதி அன்று மத்திய செனகல் பகுதியான Mbour நகரில் இருந்து 100 பேருடன் இரண்டு படகுகள் புறப்பட்டுள்ளன. அதற்கடுத்த நான்காவது நாள் 200 பேருடன் மற்றொரு படகு புறப்பட்டுள்ளது. இதனை வாக்கிங் பார்டர்ஸ் எனும் ஸ்பெயின் நாட்டு உதவிக் குழு தெரிவித்துள்ளது. இந்த படகுகள் புறப்பட்டது முதல் அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும் சொல்லப்பட்டுள்ளது.

“காணாமல் போன இந்த மக்களை நாம் தேட வேண்டியது மிகவும் அவசியம். கடலில் பயணித்த மக்களில் அதிகமானோர் காணவில்லை. இது இயல்பானது அல்ல. இந்த பணியை மேற்கொள்ள நிச்சயம் வானூர்திகள் தேவைப்படும்” என வாக்கிங் பார்டர்ஸ் ஒருங்கிணைப்பாளர் ஹெலினா மலேனோ கார்சன் தெரிவித்துள்ளார்.

ரோம்

## காதலிக்கு 100 மில்லியன் யூரோவை உயில் எழுதிய முன்னாள் பிரதமர்



இத்தாலியின் அரசியல் அமைப்பை மாற்றிய முன்னாள் பிரதமரும், இத்தாலி அரசியலின் கிங் மேக்கருமாக இருந்த மறைந்த சில்வியோ பெர்லுஸ்கோனி, தனது காதலிக்கு 900 கோடி ரூபாய் சொத்துக்களை உயில் எழுதி வைத்துள்ளார்.

இத்தாலியில் மூன்று முறை பிரதமராக இருந்தவர் சில்வியோ பெர்லுஸ்கோனி. 86 வயதான இவர், ரத்தப் புற்றுநோய் காரணமாக கடந்த மாதம் 12ம் திகதி உயிரிழந்தார். இதையடுத்து அவரின் சொத்துக்கான உயில் சில தினங்கள் முன் அவரின் ஐந்து குழந்தைகள் முன் வாசிக்கப்பட்டது. அதன்படி, ஃபின்இன்வெஸ்ட் என்று பெர்லுஸ்கோனி குடும்பம் நடத்தி வரும் கம்பெனிகளில் இருந்து இனி கிடைக்கும் பங்குகள் ஆகியவற்றை ஐந்து குழந்தைகளுக்கும் சமமாக பிரித்து கொடுத்துள்ளார்.

இதேபோல், தனது சகோதரர்கள் இருவருக்கும் ஆகியோருக்கு 130 மில்லியன் யூரோக்களை கொடுக்கும்படி உயில் எழுதி வைத்துள்ள பெர்லுஸ்கோனி, அதேசமயம் தனது காதலியான மார்டா ஃபேசினாவுக்கு 100 மில்லியன் யூரோக்களை கொடுக்கும்படி கூறியுள்ளார்.

## நீண்ட முத்தப் போட்டி நிறுத்தம்



உலகில் பலராலும் செய்ய முடியாத ஒன்றை யாராவது சாதித்து விட்டால் அவர்களை சாதனையாளர்கள் எனக் கொண்டாடுகிறது உலகம். அப்படி சாதனை செய்யும் நபர்களை ஊக்குவித்து வருகிறது கின்னஸ் அமைப்பு. இவ்வாறு தனி நபராகவோ, குழுவாகவோ உலகம் முழுவதும் பல்வேறு வகையான சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

ஏற்கெனவே படைக்கப்பட்ட சாதனையை முறியடிக்கும் வாய்ப்பையும் கின்னஸ் அமைப்பு வழங்கி வருகிறது. அப்படி பலரும் ஏற்கெனவே படைக்கப்பட்ட சாதனைகளை முறியடித்து சாதனை படைத்து வருகின்றனர். அப்படித்தான் உலகின் மிக நீண்ட முத்தமும் சாதனையாக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகின் மிக நீண்ட முத்ததிற்கான போட்டிகள் கடைசியாக கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்றது.

இதில் பங்கேற்ற தாய்லாந்தை சேர்ந்த ஏக்கச்சாய் லக்ஷனா திரானரத் தம்பதியினர் சுமார் 58 மணி நேரம் முத்தமிட்டு உலக சாதனையை படைத்தனர் . இதுவே தற்போது வரை, சுமார் 9 ஆண்டுகளாக மிக நீண்ட முத்தமாக இருக்கிறது. இதுவே உலகின் மிக நீண்ட முத்தமாக இருக்கும் என கின்னஸ் உலக சாதனைகள் அமைப்பு கூறியுள்ளது.ஆனால் தற்போது இந்த பிரிவில் எந்த போட்டிகளும் நடைபெறாது என்று கின்னஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

மத்தியப் பிரதேசம்

## முக்கோண காதலால் காதலர்கள் கைது



ஒரு பெண்ணின் காதலுக்காக இரு இளைஞர்கள் நள்ளிரவில் நடுவீதியில் சண்டை போட்ட சம்பவம் மத்தியப் பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளது. அவர்களுக்கு இடையில் ஒரு இளம் பெண்ணும் நின்றுகொண்டிருந்தார்.

இதை பார்த்த அங்கிருந்த நபர் ஒருவர் பொலிஸூக்கு அறிவித்தார். சம்பவ இடத்திற்கு விரைந்து பொலிஸார் இளைஞர்களை பிடித்து விசாரித்தனர்.

இருவரும் இதே பகுதியில் வசிக்கும் நிலையில், அங்கு நின்று கொண்டிருந்த இளம்பெண்ணுடன் இருவருக்கும் சில மாதங்களுக்கு முன்னர் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த இரு இளைஞர்களிடமும் இளம்பெண் தனித்தனியே பேசி பழகி காதலிப்பதாக கூறியுள்ளார். இந்த விவரம் அந்த இரு இளைஞர்களுக்கு தெரியாது.

இந்நிலையில், சம்பவம் நடந்த அன்றிரவு இரு இளைஞர்களும் ஒரே நேரத்தில் பெண்ணை ரகசியமாக பார்க்க வீட்டிற்கு வந்துள்ளனர். அப்போது தான் இந்த முக்கோண காதலின் உண்மை அம்பலமானது.

கர்நாடகா

## 9 ஆண்டுகளில் 15 பெண்களை திருமணம் செய்த ஆசாமி

கர்நாடகா பனசங்கரி என்ற பகுதியைச் சேர்ந்தவர் 35 வயதான மகேஷ் வெறும் 5ஆம் வகுப்பு வரை தான் படித்தவர். ஆனால், கடந்த 10 ஆண்டுகாலமாக பலே மோசடி மன்னனாக வலம் வந்துள்ளார்.

இவர் 2014ஆம் ஆண்டு தொடங்கி மெட்ரிமோனி தளங்கள் வாயிலாக பெண்களை குறிவைத்து திருமணம் செய்து வந்துள்ளார். இவர் தன்னை வைத்தியர், பொறியியலாளர், தனியார் ஒப்பந்தக்காரர் என்று ஒவ்வொரு பெண்களிடமும் வேறு வேறு பொய்களை சொல்லி தனது வலையில் வீழ்த்தியுள்ளார்.

இவ்வாறு இவர் கடந்த 9 ஆண்டுகளில் 15 பெண்களை மோசடி செய்து திருமணம் செய்துள்ளார். இந்த திருமணம் மூலம் இவருக்கு 4 குழந்தைகள் பிறந்துள்ளது. ஒரு கட்டத்தில் இவர் தன்னை வைத்தியர் என்று நிரூபிக்க போலியான சிகிச்சை நிலையத்தையும் நடத்தி வந்துள்ளார்.

இந்தாண்டு தொடக்கத்தில் மைசூரில் மென் பொறியியலாளராக பணியாற்றி வரும் பெண் ஒருவரை திருமணம் செய்துள்ளார். அந்த பெண்ணிடம் இவர் பணம் மற்றும் நகை கேட்டு தொல்லை செய்துள்ளார். பெண் தர மறுக்கவே கிடைத்த நகை, பணத்தை திருடிவிட்டு தலைமறைவானார்.



உத்தரப் பிரதேசம்

## பரிசோதனையில் இரண்டு; பிரசவத்தில் ஒன்று

உத்தரப் பிரதேசத்தில் கர்ப்பம் தரித்த தாய்க்கு வழக்கமான மருத்துவ பரிசோதனைகள் தனியார் வைத்தியசாலையில் செய்யப்பட்டன.

இதில் பெண்ணின் கர்ப்பத்தில் இரட்டை குழந்தைகள் உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், பிரசவத்தில் ஒரு குழந்தைதான் பிறந்தது, பெண்ணின் கருவில் ஒரு குழந்தைதான் இருந்தது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த குடும்பத்தார் ஒரு குழந்தையை மருத்துவமனை திருடிவிட்டது என புகார் கூறி போராட்டம் செய்துள்ளனர். தொடர்ந்து இவர்களை மருத்துவமனை நிர்வாகம் விரட்டி அடித்ததாக கூறப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இந்தியா:

# டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பிக்கிறது



மேற்கிந்தியத் தீவுகள், இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, டொமினிக்காவில் இன்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட், உப அணித்தலைவர் ஜெர்மைன் பிளக்வூட், கேமார் றோச், அல்ஸாரி ஜோசப் ஆகியோர் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களின் பெறுபேறுகளைப் பொறுத்தே இந்தியாவுக்கு சவாலளிப்பது குறித்து மேற்கிந்தியத் தீவுகள் சிந்திக்கலாம்.

மறுபக்கமாக அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள செட்டேஸ்வர் புஜாராவின் இடத்தில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படும் யஷஸ்வி ஜைஸ்வால் எவ்வாறு செயற்படுவார் மற்றும் மொஹமட் ஷமிக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ள நிலையில் மொஹமட் சிராஜ் தலைமையில் ஷர்துல் தாக்கூர், ஜெய்டேவ் உனத்கட்டை உள்ளடக்கிய வேகப்பந்துவீச்சுக் குழாம் எவ்வாறு செயற்படுமென கேள்விக்குறிகள் காணப்படுகின்றன.




## லிவர்பூல் செல்லும் சியெஸ்கா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான மொஹமட் சாலா அக்கழகத்தை விட்டு வெளியேறினால், இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸின் முன்களவீரரான பெடெரிக்கோ சியெஸ்காவை லிவர்பூல் கைச்சாத்திடும் எனக் கூறப்படுகிறது.




நியூசிலாந்தின் தலைமைப் பயிற்சியாளராக

## தொடரும் கரி ஸ்டெட்

நியூசிலாந்து ஆண்கள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக எதிர்வரும் 2025ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை கரி ஸ்டெட் தொடர்வாரென அந்நாட்டின் கிரிக்கெட் சபை நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

ஸ்டெட்டின் நடப்பு ஒப்பந்தமானது உலகக் கிண்ணத்துடன் முடிவடைவதாகக் காணப்பட்ட நிலையில், தற்போதையை நீடிப்பையடுத்து அடுத்தாண்டு இருபதுக்கு - 20 உலகக் கிண்ணம், 2025ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத் தொடர், நடப்பு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் காலத்துக்கு அவரே தொடரவுள்ளார்.

முதலில் 2018ஆம் ஆண்டு இறுதியில் பதவியேற்ற ஸ்டெட்டின் கீழ் 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணம், 2021ஆம் ஆண்டு இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத்துக்கு இறுதிப் போட்டி வரை முன்னறிய நியூசிலாந்து, 2021ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பை வென்றிருந்தது.



புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத் தொடர்:

## சம்பியனான லிவர்பூல்

■ எம்.யூ.எம். சனூண்

புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் கடந்த 2020ஆம் ஆண்டு நடாத்தப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்ட தொடரின் இறுதிப் போட்டியானது புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணியும், நாகவில்லு எருக்கலம்பிட்டி அணியும் மோதிக்கொண்டன. இதில் லிவர்பூல் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது.

லிவர்பூல் அணிக்காக ஆஷிக் இரண்டு கோல்களையும், நப்ரி, ஹிமாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.




10 முதலிடங்களைப் பெற்று

## சாதனை படைத்த பாலமுனை ஹிக்மா வித்தியாலய மாணவர்கள்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அக்கரைப்பற்று கல்வி வலய பாடசாலை களுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பாலமுனை அல் - ஹிக்மா வித்தியாலய மாணவர்கள் 10 முதலாமிடங்களையும், ஐந்து இரண்டாமிடங்களையும், ஒரு மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

கடந்தாண்டு அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற எம்.எச்.எம். நிப்ரான் மூன்று போட்டிகளிலும் முதலாம் இடத்தை பெற்று தனது திறமையை மீண்டும் நிரூபித்தார்.

12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் ஜே.எம்.அஹ்னப், பெண்களுக்கான 60 மீற்றர் மற்றும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் எப்.எப். மிதுஹா ,16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் கே.எம்.ஏ. பதீன், 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டி, நீளம் பாய்தல், குண்டு போடுதல் ஆகியவற்றில் எம்.எச்.எம் .நிப்ரான், 400 மீற்றர் தடைதாண்டலில் ஏ.கே. பவாஸ், முப்பாய்ச்சலில் எம்.எச். நபீஸ் அஹமட், 4x 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியிலும் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்து கிழக்கு மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 12 ஜூலை 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.